**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 09.08.2019–ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் அவசரக் கூட்ட தீர்மான நகல்**

**பொருள் : 1**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பழுதடைந்த கீழ்காணும் சாலைகளை சீரமைக்க நகராட்சியில் போதிய நிதி ஆதாரம் இல்லாததால் இப்பணியினை தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம் (TURIP 2019-2020)-ன் கீழ் மேற்கொள்ள ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்ட பிரேரணையை சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | நீளம்(கி.மீ) | மதிப்பீடு ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | வார்டு எண்.10, காந்தி நகர் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் பேவர் பிளாக் அமைத்தல் பணி | 1.19 | 100.00 |

**அலுவலக குறிப்பு:–**

1. இந்நகராட்சியில் போதிய நிதி ஆதாரம் இல்லாததால் இப்பணியினை தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம் (TURIP 2019-2020)-ன் கீழ் பணி மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
2. அரசு ஒதுக்கீட்டிற்கு மேல் ஆகும் கூடுதல் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.880/2019/இ1)

**தீர்மான எண் :** 1014

**தீர்மானம்** : அனுமதிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆ. தாணுமூர்த்தி,
தனி அலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 09.08.2019–ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின்அவசரக் கூட்ட தீர்மான நகல்**

பொருள் : 2

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி பகுதியில் திறந்த வெளியில் மலம் கழித்தலை ஒழிக்கும் பொருட்டு தகுதி வாய்ந்த 329 தனிநபர் இல்லங்கள் கண்டறியப்பட்டு தூய்மை இந்தியா திட்டத்தின் மூலம் தனிநபர் கழிப்பறைகள் கட்டி கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் 11 சமுதாயக்கழிப்பிடங்கள், 4 பொதுக்கழிப்பிடங்கள் கட்டப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி நகராட்சியானது திறந்தவெளி மலம் கழித்தலற்ற நகராட்சியாக முறையே 27.03.2018, 05.08.2019 ஆகிய நாட்களில் மத்திய அரசால் ஆய்வு செய்யப்பட்டு அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக திறந்தவெளியில் மலம், சிறுநீர் கழித்தலற்ற நகராட்சியாக (ODF+) சான்று பெறுவதற்கு நகர்மன்ற முன் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் இதனை தினசரி நாளிதழில் அறிக்கை செய்து பொது மக்களின் ஆட்சேபனைகளை பெறவும், இதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.1,50,000/ க்கு நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி பணி பொது சுகாதார முக்கியத்துவமான பணி என்பதால், தனி அலுவலர் முன் அனுமதி பெற்று திறந்தவெளியில் மலம், சிறுநீர் கழித்தலற்ற நகராட்சியாக (ODF+) சான்று பெறுவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் :** 1015

**தீர்மானம்** : அனுமதிக்கப்பட்டது.

-

(ஒப்பம்) ஆ. தாணுமூர்த்தி,
தனி அலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 30.08.2019—ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

## பொருள் : 1

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 மற்றும் 16 ல் உள்ள கண்ணகி தெரு, மாதவி தெரு, நாவலர் தெரு ஆகிய பகுதிகளில் குடிநீர் விநியோகம் சீராக இல்லை என குழாய் திறப்பாளர், பொது மக்கள் கொடுத்த புகாரின் பேரில் நகராட்சி பொறியாளர், பணி மேற்பார்வையாளர் ஆகியோருடன் நேரில் ஆய்வு மேற்கொண்டபோது, குடிநீர் விநியோகம் செய்யும் போது 80 இணைப்புகள் செல்வதனால் குடிநீர் அழுத்தம் குறைவாக உள்ளது கண்டறியப்பட்டது. எனவே, அதற்கு பதிலாக பகிர்மான குழாய் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.4.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி பெற மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:—

1. அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். /2019/இ1)**

**தீர்மான எண் :** 1016
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

(ஒப்பம்) ஆ. தாணுமூர்த்தி,(பொ)
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,(பொ)
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

புன்செய் புளியம்பட்டி நகராட்சி 30.08.2019–ம் நாளன்று நடைபெற்ற
தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்

பொருள் : 2

இயற்கை பேரிடர்களை எதிர் கொள்வதற்காக தீவிர மரம் வளர்ப்பு திட்டம் மற்றும் ஜல் சக்தி அபியான் திட்டத்தின் மூலம் மழைநீர் சேகரித்து நீர் நிலைகளில் நீர் மட்டம் கூடுதலாக பயன்பாட்டிற்கு வர புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட இடங்களில் ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அறிவுரைகளின்படி 1000 எண்ணிக்கை மரங்கன்றுகளை ஈரோடு மாவட்ட வனத்துறையினரிடம் வாங்குவதற்கு ஆகும் செலவுத்தொகை ரூ.15000/–க்கு மன்றத்தின் அனுமதி பெற தனி அலுவலரின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1. அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்கொண்ட நடவடிக்கையை ஏற்கலாம்.

**(ந.க.எண். 1019/2019/இ1)**

**தீர்மான எண் :** 1017
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

(ஒப்பம்) ஆ. தாணுமூர்த்தி,(பொ)
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,(பொ)
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

புன்செய் புளியம்பட்டி நகராட்சி 30.08.2019–ம் நாளன்று நடைபெற்ற
தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்

பொருள் : 3

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகளில் முதிர் ஏடிஸ் கொசுப்புழு ஒழிப்புப் பணிக்காக DBC பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இப்பணியாளர்கள் வீடு வீடாகச் சென்று கொசுப்புழு உருவாகும் கலன்களைக் கண்டறிந்து அழிக்கும் பணியினை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் நிலையான கீழ்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் நீரிலுள்ள டெங்கு கொசுப்புழுக்களை அழிப்பதற்கு அபேட் மருந்து அவசியமாகிறது. பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்புத்துறையிடமிருந்து அபேட் மருந்து பெறுவதற்கு கேட்புக்கடிதம் கொடுத்தபொழுது தங்களிடம் இருப்பு ஏதுமில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே தொற்றுநோய்த்தடுப்பு நடவடிக்கைகள் அவசர அவசியம் கருதி அபேட் மருந்து வாங்குவதற்கும் தமிழ்நாடு மருத்துப்பொருள் வழங்கல் கழகம் (TNMSC) அங்கீகாரம் பெற்ற விற்பனையாளரிடமிருந்து அபேட் மருந்து கொள்முதல் செய்வதற்கும் இதற்காகும் உத்தேச செலவீனம் ரூ.2,00,000/- மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

பொது சுகாதாரப் பிரிவு அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1274/2019/எச்1)

**தீர்மான எண் :** 1018
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

(ஒப்பம்) ஆ. தாணுமூர்த்தி,(பொ)
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,(பொ)
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 30.08.2019–ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

## பொருள் : 4

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவுகளை வீடு வீடாகச் சென்று தானியங்கி வாகனத்தின் வாயிலாக மக்கும் குப்பை மக்காத குப்பை எனத் தரம்பிரித்து மக்கும் குப்பையினை வாரச்சந்தையிலுள்ள நுண் உரமாக்கும் மையத்தில் (MCC) உரமாக்கப்படுகிறது. உரமாக்குவதற்குமுன் மக்கும் திடக்கழிவுகளை அரைக்கும் இயந்திரம் கொண்டு (Shredding Machine) அரைத்து உரமாக்கும் தொட்டியில் இடப்படுகிறது.

தற்பொழுது அரைக்கும் இயந்திரத்தில் ஏற்பட்டுள்ள பழுதின் காரணமாக திடக்கழிவுகளை அரைத்து உரமாக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளில் தொய்வு ஏற்பட்டுள்ளது. தினந்தோறும் நுண் உரமாக்கும் மையத்தில் (MCC) சுமார் 3 டன் எடையுள்ள மக்கும் குப்பை உரமாக்கப்படுவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. எனவே அரைக்கும் இயந்திரத்தில் (Shredding Machine) ஏற்பட்டுள்ள பழுதினை நீக்கம் செய்யவும் இதற்காகும் உத்தேச செலவீனம் ரூ.20,000/- மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

பொது சுகாதாரப் பிரிவு அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1291/2019/எச்1)

**தீர்மான எண் : 1019**
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

(ஒப்பம்) ஆ. தாணுமூர்த்தி,(பொ)
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,(பொ)
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 30.08.2019–ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

**பொருள் : 5**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட பொது சுகாதாரப்பிரிவு புதிய சுவராஜ் மஸ்தா வண்டி எண்.TN35AQ4883 வாகனமானது Dry Waste – Non Saleable Plastic-ஐ அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலைக்கு எடுத்துச் செல்லப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வண்டியானது Vaccum Repair Break பிடிக்காமல் வண்டியும் நகராமல் பழுதடைந்துள்ளது. இதனால் பிளாஸ்டிக் பைகளை சிமெண்ட் ஆலைக்கு எடுத்துச் செல்ல இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

பொது சுகாதாரப்பிரிவு அவசர அவசியத்தை முன்னிட்டு **தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 விதி–15ன் கீழ் ,** புதிய வண்டி என்பதால், இவ்வாகனதினை கொள்முதல் செய்த நிறுவனமான Krysttal Motors Private Ltd, Salem என்ற நிறுவனத்திற்கு அனுப்பி, மேற்படி ரிப்பேரை சரிசெய்து பணி முடித்து, தொகை வழங்கியதற்கு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

பதிவு செய்யலாம்.

**(ந.க.எண். 218 /2019/எச்1)**

**தீர்மான எண் :** 1020
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

(ஒப்பம்) ஆ. தாணுமூர்த்தி,(பொ)
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,(பொ)
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 30.08.2019—ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

**பொருள் : 6** இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மழைநீர் கட்டமைப்பு நகராட்சி கட்டிடங்கள், திறந்தவெளி கிணறு, ஆழ்துளை கிணறு, நீரேற்று நிலையம், நீர் உந்தும் நிலையம், திருமண மண்டபம் மற்றும் பொது நீர் பாதையில் ஏற்படுத்த ஜல் சக்தி அபியான் – மத்திய அரசுத் திட்டம் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரைகளின்படி, மழைநீர் கட்டமைப்பு 100% முழுமையாக செய்ய , தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.7.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) வருவாய் நிதியின் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளலாம்.

**(ந.க.எண்.1014/2019/இ1)**

**தீர்மான எண் :** 1021
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

(ஒப்பம்) ஆ. தாணுமூர்த்தி,(பொ)
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,(பொ)
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 30.08.2019–ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

பொருள் : 7

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி பேரூராட்சியாக இருந்த போது மத்திய ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட கடன்கள் தொடர்பாக TNUIDRF நிதி மேலாளர், சென்னை அவர்களின் **16.03.2018**ம் தேதியிட்ட கடிதத்தின்படி **2017 - 2018**ம் ஆண்டு கடன் நிலுவை ரூ.**1,32,88,386/-** குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி,

IDSMT கடன் பெற்றது - ரூ.**9119000/-**
கடன் செலுத்தியது - ரூ.**6559271/-**
மீதம் செலுத்த வேண்டியது - ரூ.**2559729/-**

(Waiver) தள்ளுபடி செய்யக் கேட்டு இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம் **19.03.2018** அன்று நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதற்கு TUFIDCO நிறுவனத்துடன் ஒத்திசைவு செய்து அதன் விபரத்தினை தெரிவிக்குமாறும், அக்கடன் நிலுவைத்தொகை மாநில நிதிக்குழு (SFC) மானியத்திலிருந்து பிடித்தம் செய்ய உறுதி செய்யும் பொருட்டு, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் **9480/2018/எல்ஏ3, 12.06.2018**ம் நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்புக் கோப்பின்படியும் அசல் கட்டின் படியும் அதன் பின்னர் நடவடிக்கைகள் ஏதுமில்லை. இந்நிலையில் TNUIDRF நிதி மேலாளர், சென்னை அவர்களின் கடிதத்தின்படி ரூ.**1,51,23,777/-** [ 2018 – 19 ஆண்டு] கடன் நிலுவை செலுத்தக் கோரப்பட்டுள்ளது. TNUIDRF நிதி மேலாளர், சென்னை அவர்களின் கடிதத்தின்படி **31.03.2019** முடிய கடன் நிலுவை தொகை செலுத்துதல் தொடர்பாக **22.05.2019**ம் தேதிய ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொள்ளப்பட்டு, அதன் விவரம் ஆணையாளர் அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டு, அதனை செலுத்த TUFIDCO நிறுவனத்தின் தெளிவுரை பெற்று நடவடிக்கை மேற்கொள்ள ஆணையாளர் அவர்களின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

அதன்படி TNUIDRF அலுவலக தொலைபேசி செய்தியின்படி, தெளிவுரை கோரியதில் கடன் நிலுவை ரூ.**1,51,23,777/- 31.03.2019**ற்கும், தற்போது **16.08.2019**ம் தேதிய TUFIDCO (DCB) அலுவலக மின்னஞ்சலின்படி ரூ.**1,71,80,171/–**. இடைப்பட்ட காலத்திற்கு ரூ.**19,56,394/-** கடன் நிலுவை உயர்வடைந்துள்ளது. மேலும், இக்கடன் நிலுவை தொடர்பாக, ஆய்வுக்கூட்டம் மற்றும் அருகிலுள்ள நகராட்சியினை தொடர்பு கொள்கையில், மேற்கூறிய கடன் நிலுவைத் தொகை, இந்நகராட்சியில் கட்டாயம் செலுத்தப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் வட்டித்தொகை மீதான அபராத வட்டி கூடிக்கொண்டே இருக்கும். இதுதொடர்பாக, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதத்திலும், SFC யிலிருந்து பிடித்தம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் உறுதி செய்யப்பட்டுள்ளது. SFCயில் பிடித்தம் செய்ய தெரிவிக்கும் நிலையில், கடன் மற்றும் வட்டித்தொகை செலுத்த பின்னரும் தொடர்ந்து தொகை பிடித்தம் செய்ய வாய்ப்புள்ளது என அறிய வருகிறது.

எனவே, **16.08.2019**ம் தேதிய TUFIDCO (DCB) அலுவலக மின்னஞ்சலில் குறிப்பிட்டுள்ளவாறு கீழ்காணும் விவரப்படி:-

| வ.எண் | கடன் எண் | ரூ. |
|---|---|---|
| 1 | 3012 | 15.00 |
| 2 | 3013 | 49.00 |
| 3 | 3034 | 15337.00 |
| 4 | 3035 | 34469.00 |
| 5 | 3037 | 22429.00 |
| 6 | 3040 | 23628.00 |
| 7 | 3041 | 15182.00 |
| 8 | 3090 | 32593.00 |
| 9 | 3094 | 34340.00 |
| 10 | 3014 | 17124.00 |

| | | |
|---|---|---|
| 11 | 3015 | 6853.00 |
| 12 | 3016 | 6853.00 |
| 13 | 3017 | 2742.00 |
| 14 | 3039 | 53450.00 |
| 15 | 3091 | 651658.00 |
| 16 | 3092 | 133155.00 |
| மொத்தம் | | 10,49,877.00 |

மேற்குறிப்பிட்டுள்ள 16 கடன் எண்களுக்கான அசல் ரூ.1,40,673/- , வட்டி ரூ.7,38,730/-, அபராத வட்டி ரூ.1,70,474/-

மேலும் TUFIDCO நிறுவனம் உலக வங்கியிடமிருந்து ககன் பெற்று நிதியினை கடனாக நகராட்சிக்கு வழங்கியுள்ளது.இதனால் உலக வங்கிக்கு நிலுவையின்றி செலுத்தும் நிலை அந்நிறுவனத்திற்கு இருப்பதாலும், கடன், வட்டி மற்றும் அபராத வட்டியினை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதத்தில் TUFIDCO நிறுவனத்திற்கு சென்று ஒத்திசைவு (Reconcilation) செய்து அதன் விபரத்தினை சமர்ப்பித்தால் மாநில நிதிக்குழு (SFC) மானியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படும் என அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இக்கடன்கள் வட்டி மற்றும் அபராத வட்டியினை செலுத்துவதால் இந்நகராட்சியின் கடன் பழுவினை குறைப்பதாகவும், வருங்கால வருவாயை நகராட்சியின் வளர்ச்சிக்கு பயன்படுத்த ஏதுவாக அமையும். மேலும் மேற்கூறியுள்ள 16 கடன் எண்கள் அல்லாமல் மீதமுள்ள 3033,3036,3038,3042,3048,3093,3095 மற்றும் 4046 ஆகிய இக்கடன்கள் அனைத்தும் இந்நகராட்சிக்குச் சொந்தமான கடைகள் மற்றும் பேருந்து நிலையத்தின் கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நகராட்சியின் வளர்ச்சிக்காக இக்கடன்கள் பெறப்பபட்டுள்ளதால், அக்குத்தகை இன வசூலிலிருந்து இக்கடன்கள் வட்டி மற்றும் அபராத வட்டியினை செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1) இந்த கடன் நிலுவை (வட்டியுடன்) செலுத்திட நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் நிதி ஆலோசகர் அவர்களால் ஒவ்வொரு ஆய்வின் போதும் செலுத்திட அறிவுரை வழங்கப்பட்டது.
2) இந்த நிலுவை ஒரே தவணையில் செலுத்துவதால் கடன் மற்றும் வட்டி செலுத்துவது மேலும் எழாது.
3) இதற்கு பின்னர் இந்நகராட்சிக்கு கடைகள் மூலம் பெறப்படும் வாடகை மற்றும் இதர தொகைகள் நகராட்சிக்கே வருவாயாக இருக்கும்.
4) எனவே நகராட்சி நலனை கருத்தில் கொண்டு அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.321/2013/பி1)**

**தீர்மான எண் : 1022**
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

(ஒப்பம்) ஆ. தாணுமூர்த்தி,(பொ)
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,(பொ)
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.